# 3.6 ஆமோசின் நீதியின் குரல்



ஆமோஸ் இறைவாக்கினர் கி.மு. எட்டாம் நூற்றாண்டில் இறைவாக்கு உரைத்தார். சமுதாயத்தில் காணப்படும் அநீதிகளை நேரில் கண்டார். அவ் அநீதிகளில் ஈடுபடுவோரை இறைவன் கடும் தண்டனைக்குட்படுத்துவார் என்றார். எனினும், அவற்றிலிருந்து விலகி நீதியுடன் கூடிய உண்மையான வாழ்வு வாழுமாறு இஸ்ரயேல் மக்களுக்கு கூறினார். இறைவாக்குரைத்தோருள் ஆமோசின் உரையே முதன்முதலில் எழுத்துவடிவம் பெற்றதாகக் கூறப்படுகின்றது.

## ஆமோஸ்

இவர் தென் அரசான யூதா நாட்டின் தெக்கோவா என்னும் ஊரில் பிறந்தார். (படத்தில் தெக்கோவா ஊரை கண்டுபிடிக்கவும்) தென்னாட்டில் பிறந்தாலும் இவர் வடநாட்டில் இஸ்ரயேல் மக்களுக்கு இறைவாக்கு உரைத்தார். அவர் மேய்ப்பனாகவும் அத்தி மரத்தோப்பு கொண்டவராகவும் இருந்தார்.


## அழைப்பிற்கான சூழல்

இஸ்ரயேல் நாடு ஆமோசின் காலத்தில் பொருளாதாரத் துறையில் சிறந்து விளங்கியது. சிறுபகுதி மக்களுக்கே இவ் வளர்ச்சி உரியதாக இருந்தது. ஏனையோருக்கு இப் பொருளாதார வசதியின்மை சமூக அநீதிக்கு வழிவகுப்பதாக இருந்தது.



இலவச விநியோகத்திற்காக

## ஆமோஸ் கண்ட இஸ்ரயேலரின் அநீதியான செயல்கள்




இவ்வாறான செயற்பாடு இன்று நமது சமுதாயத்தில் காணக்கூடியதாக இருக்கிறதா? இதே விதத்தில் ஓர் அட்டவணை தயாரிக்கவும்.

## ஆமோசின் அழைப்பு

செல்வந்தரால், ஏழைகள் நசுக்கப்படும் நிலையையும், ஊழல்நிறைந்ததும் அநீதி நிறைந்துமான பொய்யான சமுதாயத்தையும் கண்டு உள்ளம் குமுறுகிறார். அந்தவேளையில் இறைவாக்குரைக்கும்டி ஆமோஸ் கடவுளின் அழைப்பைப் பெற்றார்.

சிங்கம் கர்ச்சனை செய்கிறது. அஞ்சி நடுங்காதவர் எவர்? தலைவராகிய ஆண்டவர் பேசியிருக்க இறைவாக்கு உரைக்காதவர் எவர்? ஆமோஸ் 3:8

## ஆமோசின் செய்தி

- வடஅரசு சென்று தன் செய்தியை அம்மக்களுக்கு கொடுக்கிறார்.
- மக்கள் எதிர்நோக்க வேண்டிய கடவுளின் நியாயத்தீர்ப்பு பற்றி கூறினார்.
- இஸ்ரயேல் மக்களிடம் நடக்கும் அநியாயங்கள் பற்றி எச்சரித்தார்.
- ஏழைமக்களின் துன்பங்களை எடுத்துக் கூறினார்.



இலவச விநியோகத்திற்காக



வாசியுங்கள்
ஆமோஸ் 1:1 - 2:5



வாசியுங்கள்
ஆமோஸ் 7-8
அதிகாரங்கள்

ஏழைகளின் தேவைகளை எண்ணாத மக்களைக் கண்டிகின்றார். தந்தத்திலான கட்டிலில் பஞ்சணை மீது சாய்ந்து இன்பச் செருக்கில் மிதக்கும் இஸ்ரயேல் மக்களுக்கு அழிவு மிகுதியாயிருக்கும் என்றார்.

இப்படிப்பட்டவர்களுக்கான தண்டனை யாதெனில் இவர்களின் எதிரிகள் அரசை வளைத்து அரண்களை இடித்து அரண்மனைகளைச் சூறையாடுவார்கள் என்றார்.

இன்று நம்முடைய சமுதாயத்தை நோக்குவோம். எவ்வளவு அநீதிகள், ஏமாற்றுக்கள், கலப்படங்கள் காணக்கூடியதாக உள்ளன!

**பத்திரிகைகளில் வெளிவந்த சில செய்திகள்**



**ஆண்டவர், ஆமோசுக்கு வெளிப்படுத்திக் காட்டிய காட்சி
ஆமோஸ் 7:1-9 : 15**

வெட்டுக்கிளிகளின் காட்சி




நெருப்பின் காட்சி



இவை நிகழாத வண்ணம் ஆமோசும் வேண்டுதல் செய்தார். ஆண்டவர் இது நிகழும் என்றார்.

பழக்கூடையின் காட்சி



இதுவும் நிகழாது நான் அவர்களின் நடுவே கடந்து போவதில்லை என்றார்.

தூக்குநூல் குண்டின் காட்சி



## ஆமோசும் குருவாகிய அமட்சியாவும்

இஸ்ரயேல் அரசானாகிய எரொபவாமிற்கு பெத்தேலின் குருவாகிய அமட்சியா இவ்வாறு கூறினார். ஆமோஸ் ‘உமக்கு எதிராக சதி செய்கிறான்’. எரோபவாம் வாளால் மடிவான். அவனது நாடு அடிமையாகக் கொண்டு போகப்படும்’ என்றார். அத்துடன் அமட்சியா ஆமோசை யூதா நாட்டிற்கு ஓடிவிடு அங்கே இறைவாக்கு உரை என்றார். (ஆமோஸ் 7:12) அமட்சியா ஆமோசை எச்சரித்தார்.



ஆடுகள் ஓட்டிக் கொண்டுபோன என்னை ஆண்டவர் தேர்ந்தெடுத்து என் மக்களாகிய இஸ்ரயேலிடம் இறைவாக்கு உரைத்திடு என்றார் ஆமோஸ் 7:15



இலவச விநியோகத்திற்காக

ஆனால் ஆமோஸ் தொடர்ந்தும் பயமின்றி நீதிக்காக இறைவாக்கு உரைத்துக் கொண்டே இருந்தார். வடஅரசில் இறைவாக்குரைக்க வேண்டாம் என்று கூறி விரட்டி அனுப்பியதால், தனது செய்திகளை எழுத்து மூலமாக வெளிப்படுத்தியுள்ளதாக ஆமோஸ் புத்தகத்தில் காண்கிறோம். அன்றைய காலகட்டத்தில் மக்கள் ஆமோசின் செய்தியை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் வருகிற பரம்பரையாவது இச் செய்திகளை அறிந்து கொள்ளட்டும் என எண்ணியிருப்பார்.

ஆமோசின் இறைசெய்தியானது இன்றைய நமது சமுதாயத்திற்கு எவ்வாறு பொருந்தும்? இன்று உலகில் நீதி, நேர்மை என்பது கேள்விக்குறியான ஒன்றாகும். ஆனால் நீதியும் நேர்மையும் இறையரசின் வளர்ச்சிக்கு ஊன்றுகோலாகும்.

***நீதி வெள்ளமெனப்***
***பொங்கி வருக!***
***நேர்மை வற்றாத ஆறாகப்***
***பாய்ந்து வருக!***
***(ஆமோஸ் 5:24)***

நாம் இன்றைய சமுதாயத்தில் நீதி நேர்மையை ஏற்படுத்த வேண்டும். இன்றைய சமூகத்தில் நிகழ்கின்ற நீதி, நேர்மையற்ற செயற்பாடுகளை நோக்கும்பொழுது இறைவனைவிட்டு மனிதர் தூரம் விலகி நிற்கின்றனர் என்பது தெளிவாகின்றது.

இறைவார்த்தையின்படி நாம் ஒவ்வொருவரும் வாழ்ந்தால் இவ்வுலகில் நீதி, நேர்மை நிறைந்த ஓர் தார்மீக உலகத்தைக்கட்டியெழுப்ப முடியும். இதற்கென நம்மாலான உதவிகளைச் செய்வோம். நாம் நாட்டுக்குள்ளேயே நீதி, நேர்மையை நிலைநிறுத்துவதற்காக சொத்துக்களை இழந்தவர்கள், அங்கவீனர்களானவர்களைக் காண்கிறோம். ஒரு சிலர் மாத்திரமே பொறுப்புடன் வாழ்க்கையைத் துச்சமாக எண்ணி நீதி, நேர்மையை நிலைநிறுத்த உதவி செய்கின்றனர். உலகில் நல்ல பணிகளை செய்ய வேண்டும். நீதியும் சமூக நேர்மையும் மிக்க சமுதாயம் உருவாக வழிகாட்ட வேண்டும்.

## செயல்பாடு

1. ஆமோசின் இறைவாக்கு, இன்றைய உலக மக்கள் இறையரசின் பிள்ளைகளாவதற்கு எடுத்துக் காட்டாக உள்ளது என்பதை விளக்குக.

2. கீழ்வரும் அட்டவணையை நிறைவுசெய்க. நேர்மையற்ற செயல்களைக் கண்டு பிடித்து அவற்றை நேர்மையாகக் கடைபிடிக்க வேண்டிய முறைகளை எழுதுக.

| நேர்மையற்ற | பாடசாலையில் | சமுதாயத்தில் |
|---|---|---|
| 1<br>2<br>3<br>4<br>5 | | |



இலவச விநியோகத்திற்காக